**செய்தி வெளியீடு எண்: 064** **நாள்: 24.01.2020**

# <u>செய்தி வெளியீடு</u>

**<u>அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம், சென்னை – 600 028</u>**

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுகளுக்கான பயிற்சியை அளிக்கும் மாநில பயிற்சி மையமாக அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையம் உள்ளது, இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற உள்ளுறை பயிற்சியாளர்களில் 41 பேர் மத்திய தேர்வாணையம் நடத்திய இ.ஆ.ப., இ.கா.ப. முதலிய அகில இந்திய பணிகட்கான முதன்மை தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையமானது தமிழ் நாட்டில் அகில இந்திய குடிமைப்பணிகளுக்கான முதன்மை தேர்வில் தேர்ச்சி பெற்ற தேர்வர்களுக்கு மாதிரி ஆளுமைத் தேர்வுகளை 06.02.2020, 07.02.2020 ஆகிய இருநாட்களில் பயிற்சி மையத்தில் நடத்த திட்டமிட்டுள்ளது, புதுதில்லியில் இவர்கள் தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கும் வழிச் செலவுகட்காக தலா ரூ.2000/– வழங்கப்படுகிறது,

அகில இந்தியக் குடிமைப் பணிகளுக்கான முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தேர்வர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள தங்களது விண்ணப்பத்தினை (DAF) பயிற்சி மைய முதல்வருக்கு aicscc.gov@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது,

கூடுதல் தலைமைச் செயலாளர்/
பயிற்சித் துறை தலைவர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**